2022 அக்டோபர் 18]

முன்நுழைவு அனுமதி கிடைத்தவுடன், விதிமுறைகளைப் பின்பற்றி, நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து குடியிருப்புகளைக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், குடியிருப்புப் பகுதிகளில் சமூக நீதியை நிலைநாட்டியவர். 1976 ஆம் ஆண்டு அவருடைய ஆட்சிக் காலத்தில் புஷ்பா நகர் திட்டப் பகுதியில், கிட்டத்தட்ட 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டு, 46 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வீடுகள் அனைத்தையும் சீரமைப்பு செய்கின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இருப்பினும், முழுமையாக புஷ்பா நகர் தொகுப்பில், புதிதாக குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்ற கேள்வியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஷ்பா நகர் திட்டப் பகுதியில், 1976 ஆம் ஆண்டு 30 தொகுப்புகளுடன் 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டன. நீண்ட நாள் பயன்பாட்டினாலும், தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாகவும் சிதிலமடைந்த இக்குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வதற்கு வல்லுநர் குழுவும் பரிந்துரை செய்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய ஒப்புதலைப் பெற்று, வருகின்ற ஆண்டுகளில் அந்தத் திட்டப் பகுதியில் உள்ள மக்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

துணை மின்நிலையம்

***3101—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 110 K.V. துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, 26-7-2022 அன்று டெண்டர் முடிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு தயாராக இருக்கின்றது. நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவானது கடந்த ஓராண்டிற்கு முன்பாக எழுப்பப்பட்டது. அன்றைக்கு அதிராம்பட்டினம் பேரூராட்சியாக இருந்த சூழ்நிலை மாறி, நம்முடைய கழக ஆட்சியில் இன்றைக்கு நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சிறுபான்மையின மக்கள் அதிகம் வாழ்கின்ற அந்தப் பகுதியில், குறைந்த மின்னழுத்தம் காரணமாக, கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியில் எழுப்பப்பட்ட அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமலே இருந்தது. 'தட்டுங்கள்*

2022 அக்டோபர் 18]

திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்' என்பதற்கேற்ப, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களின் சார்பாக, இதயமார்ந்த நன்றியை தங்கள் மூலமாக நம்முடைய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(வினா வரிசை எண் 10 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

சார்–பதிவாளர் அலுவலகம்

***10189—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்தை பொதுப் பணித் துறைக் கட்டடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மேற்கு பதிவு மாவட்டத்திலுள்ள மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகம் 1980 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 607 சதுர மீட்டர் நிலத்தை நிலமாற்றம் செய்வதற்கு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. நிலமாற்றம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு விரைவில் புதிய கட்டடம் கட்டப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.